10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 114 சனிக்கிழமை செப்ரெம்பர் 09 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## கருக்கலைப்பு ஒருபோதுமில்லை



"கருக்கலைப்பை சட்ட ரீதியாக அங்கீ கரிக்கவுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை. அப்படி ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்த ஒருபோதும் அரசு தீர்மா னிக்கவில்லை" என அமைச்சர் ஜோன் அமர துங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"அரசாங்கம் கருக்கலைப்பை சட்ட ரீதியாக்க உள்ளதாக ஊடகங்களில் பிரசாரம் செய்யப்படுகின்றது. கத்தோலிக்கச் சபை இந்த விடயம் குறித்து கண்காணித்து வருகின் றது. புனித பாப்பாரசரும் இது குறித்துக் கருத்துவெளியிட்டிருந்தார். கருக்கலைப்பை அனுமதிக்கப் போவதில்லை என அவர் கூறியிருந்தார்.

இத்தகைய நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், கருக்கலைப்புக்கு அனு மதி அளிக்கப்படுமா என நான் வினவியி ருந்தேன். எனினும், அவர் அவ்வாறு அனு மதிக்கப்படாது என்றும், அது குறித்து அமைச்சரவையில் கூட யோசனை முன்வைக்கப்படவில்லை என்றும்


06

## கைத்தொழில் கண்காட்சி ஆரம்பமானது இன்று



தொழில் துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 'வட மாகாணக் கைத்தொழில் கண்காட்சி– 2017' நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கௌரவ கலாநிதி க.சர்வேஸ்வரன் இதில் கலந்துகொண்டு, வடமாகாணத்தில் சிறந்த உற்பத்தியாளர்களுக்கும், முயற்சியாளர்களுக்கும் விருதுகளையும் பரிசில்களையும் வழங்கி வைத்தார். (அ–11)

## யாழில் அடைமழை!



யாழ். குடாநாட்டில் இன்று அதிகாலை முதல் கடும் மழை பெய்து வருகின்றது. நீண்ட நாட்களாக வறட்சியில் தவித்த யாழ். குடாநாட்டு மக்கள் இந்த மழைப் பொழி வால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். குறிப்பாக பெரும்போக நெற்செய்கைக்காக வயல்க ளைப் பண்படுத்திவிட்டு, விதைப்புக்காகக் காத்திருந்த விவசாயிகள் பருவ மழை ஆரம் பித்ததால், கொட்டும் மழைக்கு மத்தியிலும் விதைப்பில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந் தது.

இதேவேளை, இலங்கையின் பல பாகங்க ளில் இன்று முதல் மழையுடன் கூடிய கால நிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டின் தென்மேற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள தாக் கம் காரணமாக இந்த மாற்றம் ஏற்பட்டுள் ளதாகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகா ணத்திலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டத்தின் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் வரையிலான கடும்

06

# அரசமைப்புக்கு அக்கினிப் பரீட்சை!

### நவம்பரில் சர்வஜன வாக்கெடுப்பு

புதிய அரசமைப்பு மீது எதிர்வரும் நவம்பர் மாதம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. அந்தக் கால எல்லையை இலக்குவைத்தே புதிய அரசமைப்பை தயாரிக்கும் பணியை விரைவுப் படுத்தியுள்ள அரசு, இடைக்கால அறிக்கையை எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றத் தில் சமர்ப்பிக்கவுள்ளது.

புதிய அரசமைப்பை 2017 ஆம் ஆண்டு டிசெம்பருக்குள் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசுமீது இராஜதந்திர மட்டத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றாவிட்டால் இனி வரும் காலப்பகுதியில் அரசுக்கு அரசியல் – பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் ஏற்படும் என புலனாய்வு அறிக்கைகளும் அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

06

## தண்ணீருக்கும் விலை உயர்வு



தண்ணீர் கட்டணத்தில் சிறு அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ள தாகத் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

"முதல் 15 அலகுகளுக்காக ஆகக் குறைந்த கட்டணமாக 100 ரூபா தற்போது அறவிடப்பட்டு வருகின்றது.

அதற்கு மேலதிகமாகப் பயன் படுத்தப்படும் தண்ணீருக்கான கட் டணத்திலேயே சிறு அதிகரிப்பை மேற்கொள்ள எதிர்பார்க்கப் படுகிறது.

தண்ணீர்க் கட்டணம்

06


## எப்போது அறிக்கை கையளிக்கப்பட்டது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின், புதிய அரசமைப்புச் சம் பந்தமான அறிக்கை கையளிக் கப்பட்ட தினம் குறித்து ஊட கங்களில் வெவ்வேறான திகதி கள் வெளியாவதால், அந்தக் குழப்பத்தைத் தீர்க்க எப்போது குறித்த அறிக்கை கையளிக்கப் பட்டது என்று கூட்டமைப்பு இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

"நாடாளுமன்றத்தில் விரை வில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு சம்பந்தமான இடைக்கால வரைபோடு சேர்த் துக்கொள்ளப்பட இருக்கின்ற, பல்வேறு கட்சிகளின் நிலைப் பாடு சம்பந்தமான அறிக்கை கள் அடங்கிய ஆவணம் ஒன்றில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை யானது, கூட்டமைப்பின் வழிநடத்தல் குழுவின் உறுப் பினர்களாகிய இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன் ஆகியோ ரின் கையொப்பத்துடன், கடந்த ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தலைவர் இரா. சம்பந்தனால் நேர டியாக கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மறு தினமே (ஓகஸ்ட் 30) குறித்த ஆவணமானது அரசமைப்பு வழிநடத்தல் குழு செயலகத் துக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது." என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஆ)

## மகிந்தவுக்கு மைத்திரி தூது





முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட பொது எதிர ணியினரை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியுடன் இணைத்துக் கொள்வதற்கு துரித நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மகிந்த அணியின ருடன் கலந்துரையாடல்களை நடத்த ஜனாதிபதி தலைமையில் 3 அமைச் சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.


அமைச்சர்களான ஜோன் செனவி ரத்ன, அநுர யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோரே இந்த இணைப்புக்குழுவில் நியமிக்கப்பட்ட வர்களாவர்.


இதன்படி, நாடாளுமன்ற வளா கத்தில் எதிர்வரும் நாட்களில் இந் தக் கலந்துரையாடல்கள் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. ஐ. தே. கவுடனான கூட்டர சுக்கு முடிவு கட்டிவிட்டு, சுதந்தி ரக்கட்சித்தலைமையில் புதிய அரசை அமைக்க மைத்திரி திட்டமிட்டுள் ளார்.

எனவே பொது எதிரணி என்ற பெயரில் இயங்கும் மகிந்த அணியி னரை மீண்டும், சுதந்திரக் கட்சி யில் இணைப்பதன் மூலமே புதிய அரசாங்கத்தை அமைக்க முடியும் என ஜனாதிபதி தீர்மானித்துள் ளார்.

இந்தப் புதிய அரசில் மகிந்த வுக்கு முக்கியமான அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாக வும், பொது எதிரணியைச் சேர்ந்த இன்னும் சில முக்கியஸ்தர்களுக் கும் அமைச்சுப் பதவிகளை வழங்க முடிவு செய்திருப்பதாகவும் கூறப் படுகின்றது. (ஆ)

# பொன்சேகா விடயம் முடிவு ஐ.தே.க.விடமே!





பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை தொடர்ந்தும் கட்சியில் வைத்திருப்பதா? விலக்கி விடுவதா? என்பது பற்றி ஐக்கிய தேசியக் கட்சியே முடிவெடுக்க வேண்டும் என எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத்தளபதி ஜெகத் ஜெயசூரிய போர்க்குற்றம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டை சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியமையை அடுத்து எல்லே குணவன்ச தேரர் அதற்கு எதிராகக் கருத்தை வெளியிட்டிருந்தார். இதனையடுத்து எல்லே குணவன்ச, ஒரு பைத்தியக்காரர் என்று சரத் பொன்சேகா விமர்சித்திருந்தார்.இந்த நிலையிலேயே தேரர் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

"அரசியலில் நிராகரிக்கப்பட்ட பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அடைக்கலம் கொடுத்துள்ளது.மேலும், அவரைத் தொடர்ந்தும் அமைச்சுப் பொறுப்பில் வைத்திருப்பது அமைச்சரவையின் நன்மதிப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும்" எனவும் எல்லே குணவன்ச தேரர் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

## விசா இல்லை இருவர் கைது

'விசா'அனுமதிப்பத்திரமின்றி இலங்கையில் தங்கி இருந்த பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இருவர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர்.குறித்த சந்தேகநபர்கள் இன்று கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ஆ)

## ஆவரங்காலில் திருடர் கைவரிசை

உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்ள சென்றவர்களின் வீட்டில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆவரங்கால் மேற்கு சர்வோதயா வீதியில் உள்ள வீடு ஒன்றின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் 7 ஆயிரம் ரூபா பணம், மற்றும் 1பவுண் நகையினைத் திருடி சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஆ)

# சிறுநீரக வியாபாரிகள் சிக்கினர் பொலிஸிடம்



இலங்கையில் சட்டவிரோத சிறுநீரக வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் அளித்த வாக்குமூலத்தின் படி, 15 பேர், சட்டவிரோதமாக இலங்கைக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேகத்துக்குரியவர்களில் ஒருவர் கடந்த 2 ஆம் திகதி இந்தியாவின் சஹார சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

மற்றவர், முன்னர் சிறுநீரக சட்டவிரோத மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின்பேரில் ஹைதரபாத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவராவார்.

விசாரணைகள் மூலம் சந்தேகத்துக்குரிய இருவரும் இலங்கை மற்றும் எகிப்தில் உள்ள முகவர்கள் ஊடாக சிறுநீரகங்களை விற்பனை செய்துள்ளமை தெரியவந்தது.

சிறுநீரகம் தேவையுடையோருக்கு பல லட்சம் ஷரூபாவுக்கு அதனை விற்பனை செய்வதையே இவர்கள் தமது தொழிலாகக் கொண்டிருந்தனர். பல லட்சம் ஷரூபாவை இவர்கள் லாபமாகப் பெற்றாலும், சிறுநீரகக் கொடையாளிகளுக்கு சிறுதொகைப் பணத்தையே வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

## இவரைத் தெரியுமா?



கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் நபர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த குறித்த நபர் உயிரிழந்துள்ளார். அவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸார் குறிப்பிட்டனர்.

எனினும் குறித்த நபரின் பெயர், முகவரி தொடர்பில் எவ்வித விபரங்களும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உயிரிழந்த நபர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கோ அல்லது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஆ)

## துவிச்சக்கரவண்டி மாயம்



அச்சுவேலி- தொண்டமனாறு வீதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று திருட்டு போயுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட துவிச்சக்கரவண்டி உரிமையாளரான பெண் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்துக்கு பேருந்தில் செல்வதற்காக குறித்த பெண் தினந்தோறும் துவிச்சக்கரவண்டியினை குறித்த இடத்தில் நிறுத்திவிட்டு செல்வது வழமை. இந் நிலையில் மாலை பணிமுடிந்து வீடு செல்வதற்காக துவிச்சக்கரவண்டியை எடுத்துச்செல்ல முற்பட்ட போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் அதனைக் காணவில்லை. அதனை யாரேனும் திருடியிருக்கலாம் என குறித்த பெண் பொலிஸில் முறையிட்டுள்ளார். (ஆ)

# இரத்தினபுரியில் மர்ம வாயு

மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ள இரத்தினபுரி நகரத்துக்கு அருகில் அமைந்துள்ள சிமெந்துக் கல் தளம் ஒன்றில் இருந்து எரியக் கூடிய வாயு இன்று காலை முதல் வெளியாவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அங்கு நிலம் தாழ் இறங்குவதாகவும் அதற்குள் இருந்தும் வாயு வெளிவருவதாகவும் கூறப்படுகின்றது. எதற்காக இந்த வாயு வெளிவருகின்றது என்ற அச்சத்தில் அங்குள்ள மக்கள் பீடிக்கப்பட்டு வருகின்றனர். உண்மை நிலையைக் கண்டறிய, வளிமண்டலவியல் ஆய்வாளர் குழு ஒன்று குறித்த பகுதிக்கு விரைந்துள்ளது. (ஆ

# "ஆளை விட்டால் போதும்!" நழுவும் மைத்திரி



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி செயலகக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்களும் உறுப்பினர்களும் , அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் மைத்திரிபால சிறிசேனவே போட்டியிட வேண்டுமென வற்புறுத்தியுள்ளனர்.

அண்மைக்காலமாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்புக்களின்போதும் சுதந்திரக் கட்சி சார்பாக அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவையே முன்நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு வந்தது.

எனினும் தாம் ஒருபோதும் இன்னுமொரு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால, அடுத்த பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, சந்திரிகா குமாரதுங்க போன்றவர்களும் போட்டியிடமுடியாதென்றும் தெரிவித்துள்ளார்.(ஆ)

# இராஜகோபுரத்துக்கு அடிக்கல்



வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் தேவஸ்தான இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு , திருப்பணிச் சபைத் தலைவரும், தேவஸ்தாக் குருக்களும், ஆதீனகர்த்தாவுமாகிய சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்கள் தலைமையில் நேற்று காலை இடம்பெற்றது. (ஆ)





# நடுங்கியது மெக்சிக்கோ 60 பேர் சாவு

மெக்சிக்கோவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் இதுவரை 60 பேர் பலியாகி உள்ள தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
மெக்சிக்கோவின் தென் கடற்கரைப் பகுதியில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 8.1 புள்ளிகள் வரை பதி வானது. அந்த நாட்டு நேரப்படி இரவு 11.49 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் வீடுகள், வானுயர்ந்த கட்டடங்கள் குலுங்கின.

மெக்சிக்கோவின் தெற்குப் பகுதியிலும், குவாட்டமாலாவின் மேற்குப் பகுதியிலும் நிலநடுக் கத்தால் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலநடுக்கத்தால் பலியானவர்களின் எண்ணிக்கை 32 ஆக அதிகரித்துள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1995 க்கு பிறகு மெக்சிக்கோவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தற்போது தான் உணரப்பட்டுள் ளதாக மெக்சிக்கோ மக்கள் கூறியுள்ளனர். (இ)

# நோபலுக்கு ஆபத்தில்லை



ரோஹிங்யா இஸ்லாமியர்கள் விவகாரத்தில் விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ள மியான்மர் நடைமுறை ஆட்சியாளரான ஆங்சாங் சூசியின் நோபல் பரிசு பறிக்கப்படாது எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.
மியான்மர் கடந்த சில நாட்களாக வன்முறைக் காடாகக் காட்சியளிக்கிறது. வன்முறைச் சம்பவங் களில் 400க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். பொதுமக்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பங் களாதேஷ் எல்லையை நோக்கிப் படையெடுக் கத் தொடங்கி உள்ளனர். ரோஹிங்யா இஸ்லா மியர்கள் விவகாரத்தில் உலக நாடுகள் மியான் மருக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளன. இதற்கிடையே மியான்மரின் நடைமுறை ஆட் சியாளரான ஆங்சாங் சூசியின் நோபல் பரிசு பறிக்கப்பட வேண்டும் என்ற கோஷமும் உயர்ந்து உள்ளது. ஆங்சாங் சூகியின் நோபல் பரிசை பறிக்க வேண்டும் என்று 3 லட்சத்து 86 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் இணையத்தளத்தில் கையெழுத்திட்டு மனுவும் அனுப்பப்பட்டது. ஆனால் நோபல் விருதுக் குழுத் தலைவர் ஒலவ் ஜோல்ஸ்டட், "நோபல் பரிசின் நிறுவனர் அல் பிரட் நோபலோ அல்லது நோபல் அறக்கட் டளையோ பரிசு வழங்கப்பட்டவர்களின் கௌர வத்தைத் திரும்பப் பெறுவதற்கான விதிகளை வகுக்கவில்லை. எனவே நோபல் அமைதிப் பரிசு வழங்கப்பட்டவரிடம் இருந்து அந்தப் பரிசைப் பறிக்க முடியாது" என கூறிவிட்டார்.
மியான்மரில் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆங்சாங் சூசி , ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்காக அமைதி வழியில் போரா டியதால் 1991 ஆம் ஆண்டு அவருக்கு அமைதிக் கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. (இ)

# ஈரானுக்கு முதலிடம்

பயங்கரவாதத்துக்கு நிதியுதவி அளிக்கும் நாடுகளின் பட்டிய லில் ஈரான் முதல் இடத்தில் உள்ளது.
சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஆய்வுமையம் ஒன்று வெளி யிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட் டுள்ளது.
இந்தப் பட்டியலில் அபா யங்கள் அதிகம் உள்ள நாடு களில் ஈரான், ஆப்கானிஸ்தான், கினியா-பிசாவு, தஜிகிஸ்தான், லாவோஸ், மொசாம்பிக், மாலி, உகாண்டா, கம்போடியா மற் றும் தான்சானியா ஆகியவை முதல் 10 இடங்களைப் பெற் றுள்ளன. அதேபோன்று ஆபத்து அதிகம் உள்ள நாடுகள் பட்டியலிலும் முதலிடத்தை ஈரானே பெற்றுள்ளது.
இதேவேளை 2016 இல் இருந்து பயங்கரவாத நடவடிக்கை களில் மிகப்பெரிய முன்னேற் றம் அடைந்துள்ள நாடுகளாக சூடான், தைவான், இஸ்ரேல் மற்றும் பங்களாதேஷ் ஆகியன கணிக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் பயங்கரவாதத் தால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகளாக ஜமைக்கா, துனிசியா, ஹங் கேரி, உஸ்பெகிஸ்தான் மற்றும் பெரு நாடுகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.
தென்னாசியாவில் உள்ள ஆப்கானிஸ்தான், நேபாளம் மற்றும் இலங்கை என்பன முறையே 8.38, 7.57 ,7.15 புள்ளிகள் பெற்று 2ஆவது, 14, மற்றும் 25ஆவது இடங்களைப் பெற்றுள்ளன. (இ)

# பிரான்ஸில் குண்டு மூவர் கைது


பிரான்ஸ் நாட்டின் பரிஸில் அமைந்திருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்பில் சக்தி வாய்ந்த வெடி குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள் ளன. இந்தக் குண்டுகளை வைத் திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன் குண்டுவெடிப்புக்காகப் பயன் படுத்தும் எரிவாயு உருளைகள், மின்கம்பிகள் போன்றவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தச்சம்பவம் குறித்து பிரான்ஸ் உள்துறை அமைச்சர் ஜெரார்ட் கொல்லம்ப் கூறுகையில்,
"இது தீவிரவாத நோக்கத்தோடு செய்யவில்லை எனக் கைதான வர்கள் கூறியுள்ளனர். ஆனால் அவர்கள் சிரியாவில் உள்ள நபர் களுடன் போனில் பேசியமை தெரியவந்துள்ளது. கைதான மூன்று பேரில் ஒருவர் ஏற்கனவே பொலிஸாரின் கண்காணிப்புப் பட்டியலில் இருந்துள்ளார். வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்ட இடத்தில் வங்கிகளின் வரைபடங் கள் இருந்ததால், பரிஸில் உள்ள வங்கியைத் தகர்க்க அவர்கள் முயன்றுள்ளதாக தெரியவந் துள்ளது" என்றார். (இ)

# 225 முறை சிறுமியைக் குதறிய எலிகள்



பிரான்ஸில் ஊனமுற்ற சிறுமி ஒருத்தியை 225 முறை எலி கள் கடித்துக் குதறியுள்ள சம்பவம் வெளிச்சத்துக்கு வந்து அதிர வைத்துள்ளது. ரௌபைக்ஸ் நகரத்தில் வசித்து வரும் 14 வயதான ஊனமுற்ற சிறுமியே இவ் வாறு பாதிக்கப்பட்டுள் ளார்.
குறித்த சிறுமி இரவில் வீட்டில் உறங்கிக்கொண்டி ருந்த போது கூட்டமாக வந்த எலிகள் சிறுமியின் முகம்,கால், கை என உடல் முழுவதும் 225 முறை கடித்துக் குதறியுள்ளன. இரத்த வெள்ளத்தில் மீட் கப்பட்ட சிறுமி சிகிச் சைக்காக மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து வீட்டின் உரிமையாளர் மீதும், ரௌபைக்ஸ் நகராட்சி மீதும் பாதிக்கப் பட்ட சிறுமியின் தந்தை புகார் அளித்துள்ளார். வீட்டுக்கு அருகிலுள்ள கார் நிறுத்தும் பகுதியில் இருக்கும் குப்பை கூளங் களை அகற்ற அவர் பல முறை கோரிக்கை விடுத்த தாகவும், அங்கிருந்தே எலிகள் கூட்டமாக வந்த ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# தமிழக அரசு நொடியில் வீழும்



## ஸ்டாலின் நம்பிக்கை

"எப்போது வேண்டுமானா லும் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வர வாய்ப்பு உள் ளது' என்று திமுக செயல் தலைவர் ஸ்டாலின் தெரி வித்துள்ளார்.
''நொடிப்பொழுதில்கூட தமிழகத்தில் ஆட்சி மாற் றம் வர வாய்ப்புள்ளது. சட்டப்பேரவையில் பெரும் பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று அதிமுக வில் உள்ள 22 எம்.எல்.ஏக் கள் சார்பிலும், திமுக மற்றும் அதன் தோழமைக் கட்சிகள் சார்பிலும் ஆளு நரிடம் கடிதம் கொடுத் தோம். ஆளுநர் அதற்கு இதுவரை எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை. திமுக எம்பிக்கள் சார்பில் குடியரசுத் தலைவரிடமும் மனு கொடுக்கப்பட்டுள் ளது. வரும் 10 ஆம் திகதிக் குள் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூ பிக்க உத்தரவிட வேண்டும் என ஆளுநரிடம் கோரிக்கை வைத்துள்ளோம்.
பின்னர் காலக்கெடு விதிப் போம். அதற்கும் பதில் அளிக்கவில்லையென்றால், மக்களைத் திரட்டியும், சட்டப்படியும் இந்த ஆட் சியைக் கலைக்கும் வரை போராடுவோம். விரைவில் இந்த ஆட்சி கவிழும். தி.மு.க. ஆட்சி மலரும்" என்று ஸ்டாலின் திருமண வைப வம் ஒன்றில் பேசும் போது தெரிவித்துள்ளார்.(இ)

# கட்டார் பிரச்சினைக்குத் தீர்வுகாண நான் தயார்




கட்டாருக்கும், அதற்கு அருகிலுள்ள அரேபிய நாடுகள் சிலவற்றுக்கும் இடை யில் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு, தீர்வு காணும் வகையில் மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்திருக்கிறார்.
தீவிரவாதக் குழுக்களுக்கு கட்டார் ஆதரவு வழங்குகிறது என்ற குற்றச்சாட் டின் அடிப்படையில், சவுதி அரேபியா தலைமையிலான கூட்டாளி நாடுகள் கட் டாரோடு இருந்த உறவை கடந்த ஜூன் மாதம் முதல் துண்டித்துக் கொண்டன.
" நான் தலையிட்டால், இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருதரப்புகளும் மிக விரைவாக ஒப்பந்தம் ஒன்றை எட்ட முடியுமென நம்புகிறேன் " என்று டிரம்ப் தெரிவித்திருக் கிறார்.
குவைத் அரசரோடு நடத்திய கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் பேசியபோதே அதிபர் டிரம்ப் இவ்வாறு தெரிவித் திருக்கிறார். அமெரிக்கா இந்த நெருக்கடிக்குத் தீர்வுகாண உதவ முடியும் என்று பெரும் நம்பிக்கை கொண்டிருப்பதாக அந்த நிகழ்வில் பேசிய குவைத் அரசரும் தெரி வித்தார். (இ)

எதிரொலி Ethiroli



# இந்து இளைஞரைச் சாய்த்து மகுடம் சூடியது மத்தி









அரியாலை திருமகள் சனசமூக நிலையம் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நல்லையா சதீஸ்குமார் ஞாபகார்த்தமாக நடத்திவந்த கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மகுடம் சூடிக்கொண்டது.

நேற்று இரவு 7 மணிக்கு நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது.

5 சுற்றுக்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி சுற்றுக்களைக் கைப்பற்றின.

இதனால் மிகவும் விறுவிறுப்பாக நகர்ந்த இந்த ஆட்டத்தின் 5 சுற்றுக்களும் விளையாடப்பட்டன.

இறுதியில் மத்திய விளையாட்டுக் கழகம் அதீத பிரயத்தனத்துக்கு மத்தியில் 3:2 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டதுடன், 2017ஆம் ஆண்டுக்கான திருமகள் சன சமூக நிலையத்தின் இந்த வருடத்துக்கான சம்பியனாகவும் மகுடம் சூடிக்கொண்டது. (ஐ)

# ஓட்டங்கள் சேர்க்கத் திண்டாட்டம்

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் ஓட்டங்களைச் சேர்க்கப் பெரும்பாடுபட்டு வருகின்றன.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லோர்ட்ஸில் நடந்துவருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 123 ஓட்டங்களுள் சுருண்டது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து, முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 46 ஓட்டங்களுடன் திணறிக் கொண்டிருந்தது.

இந்நிலையில் 2ஆவது நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 52.5 ஓவர்களில் 194 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பின்னர் 71 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது 2ஆவது இன்னிங்ஸை ஆடியது. நேற்று ஆட்ட நேரம் முடியும்போது, 31 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 93 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. இன்று ஆட்டத்தின் மூன்றாவது நாளாகும். (ஐ)

# 500 விக்கெட்டுகள்




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது டெஸ்டில், மேற்கிந்தியத்தீவுகளின் ஆரம்ப வீரரான கிரேக் பிராத் வெயிட்டை (4 ஓட்டங்கள்), இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அண்டர்சன் வீழ்த்தினார்.


இது டெஸ்ட் அரங்கில் அவரது 500ஆவது விக்கெட் (129 டெஸ்ட்களில்) ஆகும். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 500 விக்கெட்டுகள் என்ற மைல்கல்லைக் கடந்த 6ஆவது சர்வதேச வீரர் என்ற பெருமையுடன், முதலாவது இங்கிலாந்து வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

இதே மைதானத்தில்தான் 2003ஆம் ஆண்டு அண்டர்சன் தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சாதனைப் பட்டியலில் முதல் 5 இடங்களில் இலங்கையின் முரளிதரன் (800)), ஆஸ்திரேலியாவின் ஷேன் வோர்ண் (708), இந்தியாவின் அனில் கும்பிளே (619), ஆஸ்திரேலியாவின் கிளைன் மெக்ராத் (563), மேற்கிந்தியத் தீவுகளின் கார்ட்னி வோல்ஷ் (519 விக்கெட்) ஆகியோர் உள்ளனர். (ஐ)

# சினேகன் குறித்த காயலின் கருத்தால் பரபரப்பு






‘பிக்பாஸ்’ வீட்டுக்குள் செல்ல முன்னரே என்னுடன் அறிமுகமாகியிருந்த சினேகன், அங்கு இருந்தபோது என்னுடன்பெரிதாகக்கதைக்கவில்லை” என முன்னர் குற்றஞ் சுமத்தியிருந்த காயல், அவர் குறித்து அதிர்ச்சிகரமான தகவல் ஒன்றைத் தற்போது வெளியிட்டுள்ளார்.

“சினேகனை மக்களுக்குப் பிடித்திருக்கலாம். ஆனால் நான் அவரை வெறுக்கிறேன். அதற்கான முக்கிய இரகசியம் என்னிடம் உள்ளது.

‘பிக்பாஸ்’ நிகழ்ச்சி முடிவடைந்த பின்னர், 30ஆம் திகதி நான் அது என்ன என்பதை வெளியிடுவேன்” என்று கூறியுள்ளார். (ஓ)

# ‘பிக்பாஸ்’ வீட்டுக்குள் விஷ்ணு, கத்தரின்



‘பிக்பாஸ்’ வீடு தற்போது பரபரப்பான சூழ்நிலையை எட்டியுள்ளது. யார் வெல்லப்போகிறார்கள் என்ற கேள்வி ரசிகர்கள் மனதில் இன்னமும் உள்ள நிலையில், வாரம்தோறும் யாராவது புதிய போட்டியாளர்களை வீட்டுக்குள் அனுப்பிவருகின்றனர்.

இந்நிலையில் இன்று நடிகர் விஷ்ணுவும் கத்தரின் திரேசாவும் ‘பிக்பாஸ்’ வீட்டுக்குள் செல்வது போல டீசரில் காட்டப்பட்டது.

‘கதாநாயகன்’ படத்தின் விளம்பரத்துக்காகத்தான் இவர்கள் உள்ளே சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஓ)

# ‘மாஸ் ஹிட்’ படத்தில் விஷால்



தயாரிப்பாளர் சங்கத் தலைவர் பதிவி ஏற்றதிலிருந்து விஷால் பிஸியாகவுள்ளார். சங்கப் பொறுப்புகளை முழுக் கவனத்தோடு செய்து வருவதால் படங்களில் அவர் அதிகம் கவனம் செலுத்துவதில்லை என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் விஷாலின் புதிய படம் பற்றி ஒரு அதிகாரபூர்வத் தகவல் வந்துள்ளது.

அதாவது தெலுங்கில் பூரி ஜகன்நாத் இயக்கத்தில் ஜூனியர் என்.டி.ஆர் நடிப்பில் ‘மாஸ் ஹிட்’டடித்த படம் டெம்பர். இப்படத்தின்தமிழ் ரீமேக்கில் விஷால் நடிக்கவுள்ளார்.

விஷாலின் நடிப்பில் ‘துப்பறிவாளன்’ படம் வரும்14ஆம் திகதி வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஓ)

# அன்டர்சனை எதிர்க்கும் நடால்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு ஸ்பெய்னின் நடால் மற்றும் தென்னாபிரிக்காவின் அன்டர்சன் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இரு அரையிறுதியாட்டங்கள் நேற்று நடைபெற்றன.

முதலில் நடைபெற்ற அரையிறுதியாட்டம் ஒன்றில் 28ஆம் நிலை வீரரான தென்னாபிரிக்காவின் அன்டர்சன், 12ஆம் நிலை வீரரான ஸ்பெய்னின் கரெனொவை எதிர்கொண்டார்.

இதில், 4:6, 7:5, 6:3, 6:4 என்ற புள்ளிக்கணக்கில் அன்டர்சன் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

பின்னர் நடைபெற்ற மற்றொரு அரையிறுதியில் முதல் நிலை வீரரான ஸ்பெய்னின் ரபேல் நடால், 24ஆம் நிலை வீரரான ஆர்ஜென்ரீனாவின் டெல் பெட்ரோவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தின் முதல் சுற்றை 4:6 என்ற கணக்கில் பறிகொடுத்த நடால், அடுத்த மூன்று சுற்றுக்களையும் முறையே 6:0, 6:3, 6:2 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

நாளை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில், ரபேல் நடால், அன்டர்சனை எதிர்த்து ஆடவுள்ளார். பெண்கள் ஒற்றையருக்கான இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# காலணியகத்தில் திடீர் தீவிபத்து

கொழும்பு -புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள பாதணி விற்பனை நிலையமொன்றில் நேற்று மாலை திடீரெனத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. எனினும் சில மணி நேரத்தில் குறித்த தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும், விற்பனை நிலையத்தில் புகை சூழ்ந்துள்ளதால், புகையை வெளியேற்றும் பணிகள் இரவிரவாக இடம்பெற்றது.

குறித்த தீ ஏற்பட்டமைக்கான உறுதியான காரணம் தற்போதுவரை கண்டறியப்படவில்லை.எனினும், மின் ஒழுக்கின் காரணமாக இந்தத் தீ அனர்த்தம் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.இந்தத் தீயினால் பல லட்சம் ரூபா பெறுமதியான காலணிகள் கருகியதாகக் கூறப்படுகின்றது. (ஆ)

# உன்னிச்சைக் குள தண்ணீரில் நஞ்சா?

## செத்து மடிகின்றன கால்நடைகள்

மட்டக்களப்பு - உன்னிச்சைக் குளத்தை அண்மித்த பகுதியில் கடந்த சில தினங்களாக கால்நடைகள் திடீரென உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன. உன்னிச்சைக் குளத்திலும் அதனுடன் தொடர்புடைய நீர் நிலைகளிலும் இவ்வாறாக மாடுகள் உயிரிழப்பதால் தமக்கும் ஏதாவது பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சம் எழுவதாக இந்தப் பிரதேச மக்கள் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான குடி தண்ணீர் உன்னிச்சைக் குளத்திலிருந்தே வழங்கப்பட்டு வருகின்றது.குறித்த குளத்து நீரில் ஏதும் நச்சுப் பதார்த்தங்கள் கலந்தமையாலேயே கால்நடைகள் அதிகளவில் உயிரிழப்பதாக மக்கள் கருதுகின்றனர். அத்துடன் குளத்தில் உயிரிழந்த பல கால்நடைகளின் உடல்கள் சிதைந்த நிலையில் மிதந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய நிலையில் உன்னிச்சைக் குளத்து நீரைப் பருகினால் தமக்கும் பாதிப்பு ஏற்படுமென மக்கள் கூறுகின்றனர். குறித்த குளத்தில் மிதக்கும் கால்நடைகளின் உடல்களை அப்புறப்படுத்துவதுடன், உன்னிச்சைக் குளத்து நீரை உடனடியாக பரிசோதித்து அதில் ஏதும் நச்சுப் பதார்த்தங்கள் கலக்கப்பட்டுள்ளதா என்பதையும் கண்டறிய உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஆ)

## 151 ஆவது பொலிஸ் தினம்




151ஆவது பொலிஸ் தின நிறைவு வைபவம், கொழும்பு, பம்பலப்பிட்டியிலுள்ள பொலிஸ் பார்க் மைதானத்தில், நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. இதில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் கலந்து கொண்டனர். (ஆ)

# அதிக தங்கம் அபராதம் 50 ஆயிரம்

288 கிராமுக்கும் அதிக எடை கொண்ட தங்க நகைகளை சட்ட விரோதமான முறையில் டுபாயில் இருந்து கொண்டு வந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் விமான நிலைய அதிகாரிகளினால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து 3 தங்க மாலைகளும் 13 காப்புகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த சந்தேக நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்ட பின்னர், அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஆ)

## இன்றைய கருத்தோவியம்




நன்றி - அவந்த ஆட்டிக்கல

# 80 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ




தலவாக்கலை , சென்கிளயார் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி 80 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இதனால் ஓட்டோவில் பயணஞ் செய்த மூன்று பேர் கடும்காயங்களுடன் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வட்டவளைப் பகுதியிலிருந்து தலவாக்கலைப் பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் காயமடைந்த மூவரில் ஒருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும், ஏனைய இருவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருவதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னால் வந்த வாகனம் ஒன்றுக்கு இடமளிக்க முற்பட்டபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மலையகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் வீதிகள் வழுக்கும் நிலையில் காணப்படுகின்றன. இதனால் விபத்துக்கள் அடிக்கடி நிகழ்வதால் வாகனச் சாரதிகள் இவ்வீதிகளை பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாக பயன்படுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் வேண்டுகொள் விடுத்துள்ளனர்.(ஆ)

# சிறைச்சாலை பஸ்

## பலியெடுத்தது இளைஞரை!

மஹர சிறைச்சாலையிலிருந்து, சிறைக் கைதிகளை ஏற்றி வந்த சிறைச்சாலை பஸ், எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் பலியாகியுள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில், நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம், நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு நிக்கலஸ் மார்க்கஸ் மாவத்தையில் இடம்பெற்றுள்ளது. பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கைதிகள் சிலர், பாதுகாப்புக் காரணங்களுக்காக, இரவு வேளையில் அழைத்துவரப்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

இந்த விபத்தில், ஒரு மாதத்துக்கு முன்னர் திருமணமான, முன்னக்கரை சாந்த நிகுலா வீதியைச் சேர்ந்த குருகுலசூரிய ரொஷான் பேர்ணான்டோ (28-வயது) என்ற நபரே உயிரிழந்துள்ளதுடன், அதே பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீமால் ரொஷான் பேர்ணான்டோ (28-வயது) என்பவரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை பஸ் வண்டியைச் செலுத்தி வந்த சாரதியை நீர்கொழும்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஆ)

# மழையால் சரிந்த மலையக வீதி

இரத்தினபுரியில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக வேவல்கட்டிய பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. ஹபுகஸ்தென்ன- வேவல்கட்டிய வீதியிலேயே இவ்வாறு மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால், மண்சரிவால் சிதைந்த வீதியை உடனடியாகப் புனரமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஆ)



## நாளை நாளும் கோளும்

10.09.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 25 ஆம் நாள்

சதுர்த்தி மு.ப. 08.42 வரை | அச்சுவினி பி.ப. 12.36 வரை | மரணயோகம் மகாபரணி

இராகுகாலம் 04.33 - 06.03 | சுபநேரம் 09.03 - 10.33 | எமகண்டம் 12.03 - 01.33

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தடங்கல் | சாந்தம் | சுகம் | கோபம் | வீண்செலவு | கவனம் | நன்மை | உறுதி | செலவு | பெருமை | இன்பம் | தனம் |

எதிரொலி
Ethiroli

# படையினரைத் தண்டிக்க ஆதரவு தெரிவிக்கோம்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

“விடுதலைப் புலிளுக்கு எதிரான போரில் வெற்றியைப் பெற்று, நாட்டைக் காத்த இராணுவத்தி னரையும், அதற்குத் தலைமை தாங்கிய தளபதிகளையும் தண்டிப் பதற்கு ஒருபோதும் ஆதரவு தெரிவிக் கப்போவதில்லை” என்று இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற் றது.இதன்போதே போர்க்குற்ற விசாரணைகள் குறித்த தனது நிலைப்பாட்டை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள் ளது.

“இந்த நாட்டில் போரொன்று இருந்தது. அது முடிவுக்கும் கொண்டுவரப்பட்டது. அதற்குத் தலைமை தாங்கிய தளபதிகள் மற்றும் நாட்டைக் காத்த இராணுவத்தினரைக் காட்டிக்கொடுக்க யாராவது முயன் றால் அதனை அரச மருத்துவ அதிகா ரிகள் சங்கம் எதிர்க்கும். எந்த வகையி லும் இராணுவத்தினர் குற்றமிழைக்க வில்லை என்பதே எமது நிலைப்பாடு. இராணுவத்தினருக்காக முன்நிற்க தயார் என ஜனாதிபதியே கூறியிருக் கின்றார். அதனைப் போல நாமும் படை யினருக்காக துணை நிற்போம் ” என்று இலங்கை அரச மருத்துவ அதிகா ரிகள் சங்க செயலாளர் நவீன் டி சொய்ஸா கருத்துவெளியிட்டுள்ளார். (அ)

## அந்த நாள் ஞாபகம்.....!



### 1990.09.09

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் 5 கைக்குழந்தைகள், 42 பத்துவயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் உட்பட 184 தமிழர் இலங்கை இராணுவத்தினரால் கொல் லப்பட்டனர்.

## சாகித்திய ரத்ன விருதுகள் மைத்திரி வழங்கி வைப்பு

இலங்கையின் கலை, இலக்கியத் துறையை வளப் படுத்துவதற்கு பங்களித்த எழுத்தாளர்களுக்கு அரச சாகித்திய விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு தாமரைத்த டாக மண்டபத்தில் நேற் றுப் பிற்பகல் நடைபெற் றது.

சிங்களம், தமிழ் மற் றும் ஆங்கில இலக்கியத் தின் மேம்பாட்டுக்காக செய்த சேவையை கௌர வித்து வழங்கப்படும் சாகித்தியரத்ன விருது பேராசிரியர் ஆரிய ராஜ கருணா,நீர்வை பொன் னையன், ஜீன் அரச நாயகம் ஆகிய எழுத் தாளர்களுக்கு ஜனாதி பதியினால் வழங்கிவைக் கப்பட்டது.

2016ஆம் ஆண்டு இலங் கையின் இலக்கியத்துறைக்கு தனித்துவமான படைப்பு களை வழங்கியமையைக் கௌரவித்து பல எழுத்தா ளர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

அரச சாகித்திய விருது விழாவுடன் இணைந்த தாக வெளியிடப்பட்ட விசேட சாகித்திய நினைவு மலர் மற்றும் 2017ஆம் ஆண்டு அரச சாகித்திய விருது பெற்ற இலக்கிய நூல்கள் கலாசார அலுவல் கள் பணிப்பாளர் அநுஷா கோகுலபெர்ணாண்டோ வினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச் சர் எஸ்.பீ நாவின்ன, கலா சார அலுவல்கள் அமைச் சின் செயலாளர் டீ.சுவர்ண பால ஆகியோர்கலந்து கொண்டனர். (அ)

## தொல்லியல் அகழ்வுக்கு அனுமதி கட்டாயம்

தொல்பொருள் அகழ்வுச் செயற்பாடுகளுக்கு உரிய அனுமதி வழிமுறைகளைப் பின்பற்றும்படி கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தொல் பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தொல்பொருள் மற்றும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தலங்களுக்கு அருகாமையில் நிர்மாணிக் கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்று லாத்துறை கட்டமைப்புப் பணிகளை துரிதப்படுத் தும்படியும் அமைச்சர் அதிகாரிகளை பணித்துள் ளார். (ஆ)

## பாலியல் தலைவரை சந்தித்த திலக் மாரப்பன



இந்தியாவுக்குப் பய ணம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்ப னவை, பாலியல் குற்றச் சாட்டு சுமத்தப்பட்ட சர்ச் சைக்குரிய பாஜக தலைவர் ஒருவரே முதலில் சந்தித் துப் பேசியுள்ளார்.

மூன்று நாட்கள் பய ணமாக நேற்றுமாலை புது டெல்லி சென்ற வெளிவிவ கார அமைச்சர் திலக் மாரப் பனவை, பாஜகவின் தலை வர்களில் ஒருவரான, விஜய் ஜோலி நேற்றிரவு சந்தித்து, மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றார். இதையடுத்து, இவர்கள் பேச்சுக்களையும் நடத்தி யுள்ளனர்.

புதுடெல்லி சட்ட மன்ற முன்னாள் உறுப் பினரான விஜய் ஜோலி பாஜகவின் வெளிநாட்டு விவகாரப் பிரிவின் முன் னாள் தலைவராவார்.

பாஜகவின் தேசிய நிறை வேற்றுக்குழு உறுப்பின ராக இருக்கும் இவர் மீது, பெண் ஒருவரை பாலியல் குற்றச்சாட்டைச் சுமத்தி யதை அடுத்து, அவருக்கு எதிராகப் புதுடெல்லிப் பொலிஸ் பாலியல் வல் லுறவு உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் குர்கானில் உள்ள விடுதி அறை ஒன்றில், தனக்கு மயக்க மருந்து கொடுத்து, விஜய் ஜோலி, வல்லுறவுக்குட்படுத்திய தாக அந்தப் பெண் குற் றம்சாட்டியிருந்தார். எனி னும் விஜய் ஜோலி அதனை மறுத்திருந்தார். (அ)

## ஐ.தே.க. ஆண்டுவிழா பிற்போடப்பட்டது

ஐக்கிய தேசியக் கட்சி யின் 71ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

கட்சியின் 71 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு இரத்தினபுரி சீவலி மைதா னத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி நடத்தப்படவிருந்தது.

எனினும் குறித்த பகு தியில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக ஆண்டு நிறைவு நிகழ்வு தற்காலிகமாக ஒத்தி வைக் கப்பட்டுள்ளது.நிகழ்வு நடத்தப்படவிருந்த சீவலி மைதானம் மற்றும் அதனை அண்டிய பகுதிக ளும் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன.நீதி அமைச் சர் தலதா அத்துகோரள இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 71ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு நடை பெறும் தினத்தை பின்னர் அறிவிப்பதாக கட்சி தெரிவித்துள்ளது. (ஆ)

## தேயிலையின் விலை எகிறியது

இலங்கைத் தேயிலையின் விலை உள்நாட்டில் கடந்த மாதம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

சர்வதேசச் சந்தையிலும் தேயிலையின் விலை 28 வீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.இது உள்ளூர் தேயிலை உற்பத்தியாளர்களுக்குக் கிடைத்த அனுகூலமான நிலைமையாக கருதப்படுகிறது.

தமது சிறந்த விலையை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக உள்ளூர்த் தேயிலை உற் பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஆ)

## முதியவருக்கு பொல்லடி

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக முதியவர் மீது இருவர் கொட்டன் பொல்லினால் தாக்கிய தில் , குறித்த முதியவர் தலையில் பலத்த காயங்க ளுக்கு உள்ளானார். அவர் கோப்பாய் பிரதேச வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டுள்ளார். மாசியன்சந்தி நீர்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் 2.30 மணியளவில் இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது. தம்பையா தர்மலிங்கம் (வயது-73) என்ற முதியவரே காயங்களுக்கு உள்ளா னவர் ஆவார். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ஆ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**அரசமைப்பு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும் டிசெம்பர் இறுதியில் அல்லது ஜனவரி முதல் வாரத்தில் நடத்தப் படவுள்ளது. இதன்போது எதிரணியும், கடும் போக் குடைய சிங்கள தேசிய வாத அமைப்புகளும் அரச மைப்பை மையப்படுத்தியே பரப்புரையை முன்னெடுக்க உத்தேசித்துள்ளன.

இத்தகைய சில முக்கிய விடயங்களைக் கருத்திற் கொண்டே சர்வஜன வாக்கெடுப்பை நவம்பரில் நடத்தி முடிப்பதற்கு நல்லாட்சி அரசு தீர்மானித்துள்ளது. புதியதொரு அரசமைப்பு தயாரிக்கப்படும் என்ற உறுதி மொழியை ஜனாதிபதித் தேர்தலின் போதும் பொதுத் தேர்தலின் போதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார். இந்தப் பணியை முன்னெடுப்பதற்காக முழு நாடாளுமன்றமும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாறியது.பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழிநடத்தல் குழு அமைக்கப்பட்டதுடன், அதற்கு உதவிகளைச் செய்வதற்காக 6 உபகுழுக்களும் அமைக்கப் பட்டன. மக்களிடம் கருத்துகளும் பெறப்பட்டன.உப குழுக்களின் இடைக்கால அறிக்கைகள், மக்களின் கருத்துகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் புதிய அரசமைப்பை இறுதிப்படுத்தும் பணி இடம்பெறும் என்றும் தெரியவருகின்றது.புதியதொரு அரசமைப்பை நிறைவேற்றி அமுல்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப் பும், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவும் அவசியமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

**தண்ணீருக்கும்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்பட்டாலும், சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களுக்கு அதனால், தாக்கம் ஏற்படாது”என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (அ)

**கருக்கலைப்பு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக்குப் பதிலளித்திருந்தார்.எனவே கருக்கலைப்பு சட்ட ரீதியாக்கப்பட்டாலும் .சில வேளைகளில் சில மருத்து வர்களுக்கு கருக்கலைப்புத் தேவையாக இருக்கலாம். ஏனெனில் அவர்களது வருமானம் அப்போதுதானே அதிகரிக்கும்” என அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.(அ)

**யாழில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழை பெய்யும் என எதிர்பார்ப்பதாகத் திணைக்களத் தின் பதில் இயக்குநர் அத்துல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.இதேவேளை, கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள நிலைமை ஓரளவு குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. களுகங்கை மற்றும் அத்தனகலு ஓயாவுக்கு அருகில் உள்ள பிரதேசங்களின் மக்கள் நீர் மட்டம் தொடர்பில் இன்னமும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அனர்த்த முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.அதற்கமைய காலி, நுவரெலியா, கேகாலை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு வெளியிடப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.(அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 09.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.